**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஒட்டன்சத்திரம்**
முன்னிலை : **திரு.S.பிரவீனா,M.A.,L.L.M.,**
நீதித்துறை நடுவர், ஒட்டன்சத்திரம்.
2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
**S.T.C.No.534/2021**
( CNR.No. TNDG13-000671/2021)

அரசுக்காக சார்பு ஆய்வாளர்
ரெட்டியார்சத்திரம் காவல் நிலையம்,
குற்ற எண்.131/2019 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

மணிவாசகம் (45/2019), த/பெ.முத்துக்கிருஷ்ணன்,
161, காந்தி வீதி, சிவகங்கை. ... எதிரி

| **குற்றஞ்சாட்டப்பட்டவரின் விவரம்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வ. எண்.** | **பெயர்** | **தந்தை/கணவரின் பெயர்** | **இனம் அல்லது சாதி** | **தொழில்** | **இருப்பிடம்** | **வயது** |
| 1. | மணிவாசகம் | முத்துக்கிருஷ்ணன் | இந்து | அரசு பேருந்து ஓட்டுநர் | சிவகங்கை | 45/2019 |

| **நிகழ்வு** | **முறையீடு** | **கைது அல்லது முன்னிலை** | **பிணையின் பேரில் விடுதலை** | **விசாரணையின் தொடக்கம்** | **விசாணையின் முடிவு** | **தண்டனை அல்லது ஆணை** | **தாமதத்திற்கான விளக்கம்** |
|---|---|---|---|---|---|---|---|
| 10.08.2019 | 11.08.2019 | 11.08.2019 | 11.08.2019 (காவல் நிலைய பிணை) | 02.07.2026 | 16.07.2026 | விடுதலை | -- |

**<u>சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 ஆம் தேதியிட்ட Roc.No. 814/2020/RG/F1 ன் படியும் மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள் 2019 ன் கீழ் விதி 106(4) ன் படி</u>**

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | – |

| | | |
|---|---|---|
| 2. | இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 06.12.2021 |
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | – |
| 4. | எதிரியிடம் கு.வி.மு.ச. 240 பிரிவின் கீழ் வினவிய நாள் | 22.01.2026 |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுக்களின் சுருக்கம் | எம்.பி.எண்.1/2026, 16.07.2026 ஆம் தேதியிட்ட கூடுதல் சாட்சி மனு அனுமதிக்கப்பட்டது.<br>எம்.பி.எண்.2/2026, 16.07.2026 ஆம் தேதியிட்ட கு.வி.மு.ச. பிரிவு 294–ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது. |
| 6. | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம்: | |

| சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|
| அ.சா.1 | 02.07.2026 | கு.வி.இல்லை |
| அ.சா.2 | 02.07.2026 | கு.வி.இல்லை |
| அ.சா.3 | 02.07.2026 | கு.வி.இல்லை |
| அ.சா.4 | 02.07.2026 | 02.07.2026 |
| அ.சா.5 | 02.07.2026 | 02.07.2026 |
| அ.சா.6 | 16.07.2026 | 16.07.2026 |

| | | |
|---|---|---|
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | 20.07.2026 |
| 8. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய / ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள் | – |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவுப்படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் அதன் விவரம் மற்றும் தீர்வு | – |

இவ்வழக்கானது 06.12.2021 ஆம் தேதி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 07.08.2026 ஆம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுத் தரப்பில்

கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்குரைஞர் நிலை–2 **செல்வி.ஆர். நபிரா சப்ரின், எம்.எல்.,** அவர்கள் ஆஜாராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் **திரு.A.பூர்ணச்சந்திரன்,B.A.,B.L.,** அவர்கள் ஆஜாராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்டும் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

**1)** ரெட்டியார்சத்திரம் காவல் நிலைய குற்ற எண்.131/2019–ன் படி சார்பு ஆய்வாளரால் புலன் விசாரணை செய்யப்பட்டு, எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279, 338 ஆகியவற்றின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்ற செயல் புரிந்துள்ளதாக கு.வி.மு.ச. பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

**2) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :** கடந்த 10.08.2019 ஆம் தேதி இரவு சுமார் 22.30 மணியளவில், திண்டுக்கல் – ஒட்டன்சத்திரம் சாலையில் கோபிநாத சுவாமி அலுவலகம் பேருந்து நிறுத்தம் அருகில், இவ்வழக்கின் புகார்தாரர் பாலாஜி அவருக்கு சொந்தமான TN 57 BF 9154 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடது ஓரமாக சென்றபோது, இவ்வழக்கின் எதிரி மணிவாசகம் TN 63 N 1856 என்ற பதிவு எண் கொண்ட அரசுப் பேருந்தை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து புகார்தாரரின் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி புகார்தாரருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 279, 338 ஆகியவற்றின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என ரெட்டியார்சத்திரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3)** மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிக்கு எதிராக **முதல் தோற்ற வழக்கு** எழுந்ததால், வழக்கானது கடந்த 06.12.2021 ஆம் தேதி கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி ஆஜரானவுடன்

குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 207–ன் கீழ் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்டு, கடந்த 22.01.2026 ஆம் தேதி எதிரி மீது இ.த.ச. பிரிவு 279, 338 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் விளக்கிக் கூறப்பட்டது. குற்றச்சாட்டின் சாராம்சங்கள் குறித்து எதிரியிடம் விளக்கி கேட்கப்பட்டபோது, எதிரி குற்றத்தை மறுத்து சாட்சி விசாரணை வேண்டினார். எனவே, இந்த வழக்கு சாட்சிகள் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

4) அதன் அடிப்படையில், இந்த வழக்கில் அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.6** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) சம்பவத்தைப் பற்றியும், புகார் வாக்குமூலம் கொடுத்தது பற்றியும் கூறும் சாட்சியாக திரு.பாலாஜி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சியாக திரு.கண்ணன் அ.சா.2 ஆகவும், சம்பவத்தை கேள்விப்பட்டது பற்றி கூறும் சாட்சியாக திரு.செந்தில்குமார் அ.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மாதிரி வரைபட மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளாக திரு.கோ.முத்துச்சாமி அ.சா.4 ஆகவும், திரு.கண்ணன் அ.சா.5 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.4–ன் மூலம் பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கில் கூடுதல் சாட்சியாக திரு.உ.முத்துச்சாமி அவர்கள் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆகவும், TN 57 BF 9154 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.5** ஆகவும், TN 63 N 1856 என்ற பதிவு எண் கொண்ட அரசுப் பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.6** ஆகவும், காயச்சான்று **அ.சா.ஆ.7** ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)–ன் கீழ்

வினவியபோது, அவற்றை எதிரி "**பொய் சாட்சியம்**" என்று கூறியதோடு, தனது தரப்பில் விசாரிக்க சாட்சி "**உண்டு**" என்றும் கூறினார். ஆனால், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாதால், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாமலும், அதேபோல், சான்றாவணங்களோ, சான்று பொருட்களோ குறியீடு செய்யப்படவில்லை. இரு தரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன.

7) அரசு தரப்பில், எதிரியின் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சாட்சியங்களின் மூலமும், சான்றாவணங்களின் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டியது அவசியம் என்றும் வாதிடப்பட்டது. ஆனால், எதிரி தரப்பில் அரசு தரப்பு சாட்சிகள் எவரும் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் வகையிலோ, விபத்தை எதிரி அதிவேகமாகவோ, அஜாக்கரதையாகவோ வாகனத்தை ஓட்டி வந்து எதிரியின் கவனக்குறைவால்தான் நடந்தது என்றோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அரசு தரப்பு வழக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை அரசு தரப்பு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் :**

(i) கடந்த 10.08.2019 ஆம் தேதி இரவு சுமார் 22.30 மணியளவில், திண்டுக்கல் – ஒட்டன்சத்திரம் சாலையில் கோபிநாத சுவாமி அலுவலகம் பேருந்து நிறுத்தம் அருகில், இவ்வழக்கின் எதிரி TN 63 N 1856 என்ற பதிவு எண் கொண்ட அரசுப் பேருந்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்தாரா ? என்பதும்,

(ii) கடந்த 10.08.2019 ஆம் தேதி இரவு சுமார் 22.30 மணியளவில், திண்டுக்கல் – ஒட்டன்சத்திரம் சாலையில் கோபிநாத சுவாமி அலுவலகம் பேருந்து நிறுத்தம் அருகில், இவ்வழக்கின் எதிரி TN 63 N 1856 என்ற பதிவு எண் கொண்ட அரசுப் பேருந்தை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து, TN 57 BF 9154 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த இவ்வழக்கின் புகார்தாரர்

பாலாஜியின் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி பாலாஜிக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தினாரா என்பதும் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதும்,

(iii) அவ்வாறு நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு வழங்க வேண்டிய தண்டனை என்ன ? என்பதே ஆகும்.

**9) தீர்வு :** கடந்த 10.08.2019 ஆம் தேதி இரவு சுமார் 22.30 மணியளவில், திண்டுக்கல் – ஒட்டன்சத்திரம் சாலையில் கோபிநாத சுவாமி அலுவலகம் பேருந்து நிறுத்தம் அருகில், இவ்வழக்கின் புகார்தாரர் பாலாஜி அவருக்கு சொந்தமான TN 57 BF 9154 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடது ஓரமாக சென்றபோது, இவ்வழக்கின் எதிரி மணிவாசகம் TN 63 N 1856 என்ற பதிவு எண் கொண்ட அரசுப் பேருந்தை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து புகார்தாரரின் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி புகார்தாரருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதே அரசுத் தரப்பு குற்றச்சாட்டாகும்.

10) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், தான் புதுப்பட்டியில் குடியிருந்து கோவையில் ஒரு தனியார் நிறுவனத்தில் CNC ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன் என்றும், கடந்த 2019 ஆம் வருடம் தேதி மாதம் எதுவும் ஞாபகமில்லை, ஒரு நாள் இரவு 10.00 மணியளவில் திண்டுக்கல் – ஒட்டன்சத்திரம் ரோட்டில் ரெட்டியார்சத்திரத்தில் தான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி தனக்கு சொந்தமான TN 57 BF 9154 என்ற இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன் என்றும், தனக்கு விபத்து ஏற்பட்டு தான் மயங்கி விழுந்துவிட்டேன் என்றும், அதில் தனக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது என்றும், தனக்கு பின்னால் வந்த தனது நண்பர் கண்ணன் தன்னை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தார் என்றும், **தான் மயக்கத்தில் இருந்ததால் தன் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய வாகனம் குறித்து தனக்கு எதுவும் நினைவில் இல்லை என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும்,** தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில்

புகார்தாரர் என்னும் இடத்தில் உள்ள கைரேகை தன்னுடையதுதான் என்றும், தனக்கு வலது கையில் காயம் ஏற்பட்டு இருந்ததால்தான் புகார் வாக்குமூலத்தின் தனது இடது பெருவிரலின் கைரேகையை வைத்தேன் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 பிறழ்சாட்சியாகக் கருதப்பட்டு, அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில், அரசுத் தரப்பு வழக்கிற்கு ஆதரவான சங்கதிகள் எதுவும் புலனாகவில்லை.

**11)** சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், தான் புதுப்பட்டியில் குடியிருந்து மார்க்கெட்டிங் வேலை செய்து வருகிறேன் என்றும், கடந்த 2019 ஆம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை, ஒரு நாள் இரவு சுமார் 8.00 மணியளவில் அ.சா.1 கோயம்புத்தூரில் வேலை செய்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார் என்றும், அப்போது ரெட்டியார்சத்திரம் மேற்கு சத்திரம் பஸ் ஸ்டாப் அருகே அ.சா.1 சென்று கொண்டிருந்த அப்பாச்சி வாகனம் விபத்து ஏற்பட்டது என்றும், தானும் தனது அண்ணன் முத்துச்சாமியும் அவருக்கு பின்னால் சென்று கொண்டிருந்தோம் என்றும், திடீரென்று அ.சா.1 சென்று கொண்டிருந்த வழியில் கூட்டமாக இருப்பதை பார்த்து நாங்கள் அங்கு சென்று பார்த்தோம் என்றும், அப்போது அங்கே அ.சா.1 அடிபட்டு கிடந்தார் என்றும், **அ.சா1 –ன் மீது அரசு பேருந்து மோதியதாக சம்பவ இடத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள் என்றும், பதட்டத்தில் அரசு பேருந்தை ஓட்டி வந்தவரை தான் பார்க்கவில்லை** என்றும், அதன் பின்னர் அ.சா.1–ஐ தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம் என்றும், பின்பு JJ அருள் துரை என்ற தனியார் மருத்துவமனையில் அ.சா.1–ஐ சிகிச்சைக்காக அனுமதித்தோம் என்றும், **ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது** என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 பிறழ்சாட்சியாகக் கருதப்பட்டு, அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில், அரசுத் தரப்பு வழக்கிற்கு ஆதரவான சங்கதிகள் எதுவும் புலனாகவில்லை.

**12)** சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில், தனது சாட்சியத்தில், தான் புதுப்பட்டியில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன் என்றும், கடந்த 2019 ஆம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை, ஒரு நாள் இரவு சுமார் 10.00 மணியளவில் தனது அக்கா மகனான பாலாஜி அ.சா.1–க்கு அரசு பேருந்து விபத்து ஏற்பட்டுவிட்டதாக சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள் என்றும், தகவலைப் பெற்றுக் கொண்டு திண்டுக்கல் JJ அருள்துரை மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்த அ.சா.1–ஐ பார்த்தேன் என்றும், இந்த வழக்கில் ஏற்பட்ட விபத்தானது எப்படி நடந்தது என்று தனக்கு நேரடியாக தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 பிறழ்சாட்சியாகக் கருதப்பட்டு, அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில், அரசுத் தரப்பு வழக்கிற்கு ஆதரவான சங்கதிகள் எதுவும் புலனாகவில்லை.

**13)** மாதிரி வரைபட மற்றும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில், தான் புதுப்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், கடந்த 2019 ஆம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை, ஒருநாள் இரவு 09.45 மணியளவில் ரெட்டியார்சத்திரம் மேற்கு சத்திரம் பஸ் ஸ்டாப் அருகே போலீசார் படம் வரைந்து கொண்டிருந்தார்கள் என்றும், தானும் தனது தம்பி கண்ணனும் அங்கே இருந்தோம் என்றும், அப்போது போலீசார் எங்களிடம் சாட்சி கையொப்பம் செய்து தரும்படியாக கேட்டார்கள் என்றும், தானும் தனது தம்பி கண்ணனும் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** மாதிரி வரைபட மற்றும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 தனது சாட்சியத்தில், தான் புதுப்பட்டியில் குடியிருந்து மார்க்கெட்டிங் வேலை செய்து வருகிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், கடந்த 2019 ஆம் வருடம் தேதி,

மாதம் ஞாபகமில்லை, ஒருநாள் இரவு 09.45 மணியளவில் ரெட்டியார்சத்திரம் மேற்கு சத்திரம் பஸ் ஸ்டாப் அருகே போலீசார் படம் வரைந்து கொண்டிருந்தார்கள் என்றும், தானும் தனது தம்பி கண்ணனும் அங்கே இருந்தோம் என்றும், அப்போது போலீசார் எங்களிடம் சாட்சி கையொப்பம் செய்து தரும்படியாக கேட்டார்கள் என்றும், தானும் தனது தம்பி கண்ணனும் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, **"தான் கையொப்பம் செய்து கொடுத்த பார்வை மகஜரில் என்ன விபரம் எழுதியுள்ளது என்ற விபரம் தனக்கு தெரியுமா என்றால் தனக்கு தெரியாது"** என்று சாட்சியம் அளித்துள்ளனர்.

**15)** இவ்வழக்கில் கூடுதல் சாட்சியான அ.சா.6 தனது சாட்சியத்தில், தான் தற்போது ரெட்டியார்சத்திரம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தனக்கு சார்பு ஆய்வாளர் சிவராஜா அவர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு பரிட்சயம் என்றும், வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், சார்பு ஆய்வாளர் சிவராஜா அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, கடந்த 11.08.2019 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு அருள்துறை மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை பெற்று, அருள்துறை மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பாலாஜி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து, அதன் பேரில் நிலைய குற்ற எண்.131/2019 இ.த.ச. பிரிவு 279, 337 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு அவர் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் 08.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துச்சாமி, கண்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளை தனித் தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன் என்றும், பின்பு அன்றைய தினம் சாட்சிகளான பாலாஜி, கண்ணன், ஜெயலெட்சுமி, செந்தில்குமார் ஆகியோர்களை தனித் தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச.வின் கீழ்

வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு நிலையம் வந்து ஆஜரான எதிரியை 11.08.2019 ஆம் அன்று 12.00 மணிக்கு ரெட்டியார்சத்திரம் காவல் நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்து தக்க இரு நபர் பிணையில் விடுவித்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**16)** மேலும் அ.சா.6 தனது சாட்சியத்தில், பின்பு 13.08.2019 ஆம் தேதியன்று இவ்வழக்கில் வாதி ஓட்டிவந்த TN 57 BF 9154 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தையும், எதிரி ஓட்டிவந்த TN 57 N 1856 என்ற எண்ணுள்ள அரசு பேருந்தையும் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக அனுப்பி ஆய்வு அறிக்கையை பெற்று, மோட்டார் வாகன ஆய்வாளர் விஜயக்குமார் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு கடந்த 11.08.2019 ஆம் தேதியன்று புகார்தாரர் பாலாஜிக்கு சிகிச்சை அளித்த திண்டுக்கல், JJ அருள் மருத்துவமனை மருத்துவர் அருள்துறை அவர்களை விசாரணை செய்து, 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அருள்துறை அவர்கள் காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்றளித்ததால் சட்ட பிரிவுகளை 279, 337 இ.த.ச.விலிருந்து 279, 338 இ.த.ச.வாக சட்டபிரிவு மாறுதல் செய்து சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 07.11.2019 ஆம் தேதி எதிரி மீது இ.த.ச. பிரிவு 279, 338 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**17)** அ.சா.6 தனது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில், புகார்தாரர் எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் விசாரணை அதிகாரியே கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல என்றும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சொன்ன விதத்தில் சொன்ன மாதிரி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல என்றும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமலேயே காவல் நிலையத்தில் வைத்து வழக்கின் தோதுக்கு ஏற்ப பார்வை மகஜர், வரைபடம் ஆகிய ஆவணங்கள் தயார்

செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல என்றும், இந்த விபத்து சம்பவம் சொன்ன இடம், சொன்ன நேரம், சொன்ன விதத்தில் நடைபெறவில்லை என்றால் சரியல்ல என்றும், இந்த விபத்திற்கு காயம்பட்ட நபரே பொறுப்பு என்றால் சரியல்ல என்றும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் உண்மைக்கு மாறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல என்றும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**18)** இ.த.ச. 279, 338, 304A ஆகிய பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் இரு சாரம்சங்கள் நிரூபிக்கப்பட்டு இருக்க வேண்டும். அவை விபத்தை ஏற்படுத்திய எதிரி அடையாளம் காட்டப்பட்டு இருக்க வேண்டும் மற்றொன்று எதிரி, தான் ஓட்டிவந்த வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தார் என்று நிரூபிக்கப்பட்டு இருக்க வேண்டும். தற்போது இந்த வழக்கில் மேற்சொன்ன இரு சாரம்சங்களும் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலித்து பார்க்கையில், அரசு தரப்பு சாட்சிகள் யாரும் எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் எதிரி அவர் ஓட்டி வந்த வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்தார் என்று அரசு தரப்பு சாட்சிகள் யாரும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், எதிரிக்கும் எதிரி செய்த குற்றத்திற்கும் இடையே உள்ள தொடர்பை நிரூபிப்பது என்பது இவ்வழக்கின் முக்கிய அம்சம் ஆகும். இவ்வழக்கில் எதிரிக்கும் குற்றத்திற்குமான தொடர்பு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்தபோது, அ.சா.1 தனது சாட்சியத்தில் தனக்கு விபத்து ஏற்பட்டு தான் மயங்கி விழுந்துவிட்டதாகவும், தான் மயக்கத்தில் இருந்ததால் தன் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய வாகனம் குறித்து தனக்கு எதுவும் நினைவில் இல்லை என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும் முற்றிலுமாக அரசுத் தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும், இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், அ.சா.1 அடிபட்டுக் கிடந்தார் என்றும், அப்போது பதட்டத்தில் இருந்ததால் விபத்தை ஏற்படுத்திய அரசுப் பேருந்து ஓட்டுநரைப் பார்க்கவில்லை என்றும் முற்றிலுமாக அரசுத் தரப்பு வழக்கிற்கு

முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அரசுத் தரப்பு சாட்சிகள் யாரும் எதிரியின் அடையாளத்தைக் குறித்தோ, அவர் அரசுப் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்தார் என்றோ சாட்சியம் அளிக்கவில்லை. மேற்சொன்ன காரணங்களால் இவ்வழக்கின் எதிரிக்கும் இந்த குற்றத்திற்குமான தொடர்பை, அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19) வழக்கின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், விபத்து ஏற்பட்டு, அதில் பாலாஜிக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. ஆனால் யாருடைய கவனக்குறைவால் இந்த விபத்து நடந்தது என்று அரசு தரப்பு சாட்சிகள் எவரும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காததால், எதிரி மீதான அரசு தரப்பு வழக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், எதிரி அதிவேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ வாகனத்தை இயக்கியதாகவோ, விபத்து எதிரியின் கவனக்குறைவால் நடந்தது என்றோ அரசு தரப்பு சாட்சிகள் எவரும் சாட்சியம் அளிக்கவில்லை. இந்நிலையில் அ.சா.6 ஆன சிறப்பு சார்பு ஆய்வாளரின் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.8 வரையிலான அரசு தரப்பு சான்றாவணங்களை மட்டும் வைத்து இவ்வழக்கில் எதிரியை குற்றவாளி என்று முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

20) முடிவாக, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 279, 338 ஆகியவற்றின் கீழ் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், இந்நீதிமன்றம் முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(i) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

21) எதிரியின் பிணையப் பத்திரம் மேல்முறையீட்டு காலம் வரை அமலில் இருக்கும் எனவும், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு, மேற்படி எதிரியின் பிணையப் பத்திரம் தானாகவே ரத்தாகும் எனவும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு

சொத்து எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால், வழக்கு சொத்தை பற்றிய உத்தரவு ஏதுமில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.08.14 18:19:27 +0530

நீதித்துறை நடுவர்,
ஒட்டன்சத்திரம்.

1. **அரசு தரப்பு சாட்சிகள்:-**

| சாட்சியின் வரிசை | சாட்சியின் பெயர் | எவ்வகையான சாட்சி |
|---|---|---|
| அ.சா.1 | பாலாஜி | புகார்தாரர் |
| அ.சா.2 | கண்ணன் | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.3 | செந்தில்குமார் | கேள்விநிலை சாட்சி |
| அ.சா.4 | கோ. முத்துச்சாமி | மாதிரி வரைபட மற்றும் பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | கண்ணன் | மாதிரி வரைபட மற்றும் பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | உ. முத்துச்சாமி | புலன் விசாரணை அதிகாரி (கூடுதல் சாட்சி) |

2. **அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| சான்றாவணங்களின் வரிசை | சான்றாவணங்களின் விபரம் | குறியீடு செய்யப்பட்ட சாட்சியின் விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | TN 57 BF 9154 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.6 |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.6 | TN 63 N 1856 என்ற பதிவு எண் கொண்ட அரசுப் பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.7 | காயச்சான்று | அ.சா.6 |
| அ.சா.ஆ.8 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.6 |

3. **<u>சான்று பொருள் :</u>** இல்லை.

4. **<u>எதிரி தரப்பு சாட்சிகள் :</u>** இல்லை.

5. **<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.08.14 18:19:34 +0530

நீதித்துறை நடுவர்,
ஒட்டன்சத்திரம்.

**குறிப்பு :** 1) தீர்ப்புரையின் நகல் திண்டுக்கல் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2) தீர்ப்பின் விவரம் அரசு தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டது.

3) விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.